146

146

KAVERI VACHAGAM

BOOK II

(*Based on the New Syllabus, 1939.*)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1942
MADRAS

VIDWAN M. RAJAMANIKKAM, B.O.L.
Tamil Pandit, Muthialpet High School, Madras.

905

K. R. VARDON & CO.
TANJORE

காவேரி வாசகம்

இரண்டாம் புத்தகம்

(Based on the New Syllabus, 1939)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1942
MADRAS

494 . 81186

ஆசிரியர் :

வித்வான், மா. இராசமாணிக்கம், B. O. L.,

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

903

கே. ஆர். வார்டன் அண்ட் கம்பெனி,

தஞ்சாவூர்

1941

பதிப்புரிமை] [விலை அணா 4

P31,9

The Jupiter Press, Madras.

905

முகவுரை

காவேரி வாசகம் என்னும் பெயருடைய இத் தமிழ்ப்பாட வரிசை, கல்வித்துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள **புதிய பாட இயல்** (Syllabus) படி எழுதப்பெற்றது. புதிய பாட இயலில் குறிப்பிடப்பட்டுள்ள **ஒவ்வொரு குறிப்பும்** இதன்கண் இடம் பெற்றுள்ளது. மாணவர் பிழையின்றிப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய தமிழ் அறிவினையும், பொது அறிவினையும் பெறச் செய்தலே இந்நூல் வரிசையின் நோக்கமாகும்.

பாட இயலிற் கண்டவாறே **புதிய சொற்கள்** பாடந்தோறும் தரப்பெற்றுள்ளன. ஒவ்வொரு நூலிலும் பிள்ளைகளது தகுதிக்கேற்றபடி கதை, கைத்தொழில், பயிர்த்தொழில், சுகாதாரம், உரையாடல், இலக்கியம், நாடகம் முதலிய அறிவியல் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறே எளிய முறையில் அமைந்த பழைய பாடல்களாகிய கும்மி, தாலாட்டு, அம்மானை, பந்தாட்டம், ஊசல், பள்ளு, குறம் முதலியனவும் புதிய பாடல்களும் நடிப்புக்குரிய பாடல்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் **கேள்விகள், பயிற்சி, இலக்கணம்** என்பவை வகுப்புக்கு எற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. **மௌன வாசிப்பின்** அவசியம் கதைப் பாடங்கள் மூலமாகவும் படப்பயிற்சிகள் மூலமாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளது. **கடிதம், கட்டுரை** முதலியன எழுதுதற்குத் தக்கவாறு சில பாடங்களும், மாதிரிக் கடிதங்களும் எழுதப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், **காவேரி வாசக வரிசை**—செவிலித்தாய் போல் மக்களுக்குத் தன் நன்னீரை அளித்துக் காக்கும் புகழ் மிக்க காவேரி ஆறுபோல்—தமிழ் மாணவர்க்கு அறிவினை ஊட்டும் செவிலித் தாயாக **அமைவுறும் எனல் மிகையாகாது.**

மா. இராசமாணிக்கம்

ஆசிரியர்க்கு :

1. பாட இயலிலும், தமிழ்ப்பாட நூலிலும் கண்டுள்ள வகுப்புக்கேற்ற நிறுத்தக் குறிகளைப் பற்றிய அறிவைத் தெளிவுற ஊட்டி, அவை இடவேண்டும் இடங்களை நன்கு உணர்த்திப் பழக்குதல் இன்றியமையாதது. பொருள் விளங்கும்படி வாசித்தற்கு நிறுத்தக் குறிகள் இன்றியமையாதவை என்பது பிள்ளைகள் உள்ளத்தில் நன்கு பதியச் செய்தல் நல்லது.

2. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் தரப்பட்டுள்ள பயிற்சியில் நன்கு பழகும்படி மாணவரை ஊக்குதல் நற்பயிற்சியாகும். பயிற்சிகளிற் பழகும் மாணவர் அறிவு விரைவில் நிறைவுறும் என்பது கல்வி அறிஞர் கருத்தாகும். பயிற்சிகளை மாதிரியாகக் கொண்டு, மேலும் பல உதாரணங்கள் தந்து, பிள்ளைகளைப் பழக்குதல் சிறப்புடையது.

3. குறிப்புப் புத்தகம்—அவசியமான பத்திரிகைச் செய்திகளை ஒட்டிவைத்துக்கொள்ளும் நோட்டுப் புத்தகம் — என்பவற்றின் அவசியத்தைப் பிள்ளைகளுக்கு விளக்கி, அவற்றை வைத்துக் கொண்டு பழகுமாறு செய்தல் ஆசிரியர் அருங்கடனாகும்.

4. பிள்ளைகளைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல், அவ்விடங்களைப்பற்றிய செய்திகளை விளக்குதல், அவற்றைப்பற்றிக் கட்டுரை வரையச் செய்தல், பத்திரிகைச் செய்திகளை நாள்தோறும் அறிவித்துப் பிள்ளைகட்கு உலக அறிவை ஊட்டுதல் முதலியன பிள்ளைகள் முன்னேற்றத்திற்கு ஏற்றவையாகும்.

5. தோட்ட வேலை, அட்டை வேலை, மூங்கில், பிரம்பு இவற்றைக் கொண்டு செய்யும் கைத்தொழில், நூல் நூற்றல், தையல் வேலை, பின்னல் வேலை முதலியவற்றில் பிள்ளைகள் பெறும்

அநுபவத்தை அன்றாடம் தத்தம் குறிப்புப் புத்தகத்தில் எழுதச் செய்தல் நல்ல முறையாகும்.

6. பாட நூலில் வரும் உரையாடல்களை நாடகமாக நடிக்கச் செய்தல், நாடக உருவில் எழுதச் செய்தல், நாடக உருவில் உள்ள வற்றைக் கதை வடிவில் எழுதச் செய்தல், கதையில் கூறப்படும் பாத்திரங்களாகத் தம்மை நினைந்து தம் சரித்திரம் கூறுதல் போலவும்-அதனைப் பிறர் கூறுதல் போலவும் சொல்லவும் எழுதவும் செய்தல் முதலியன மாணவர்க்குப் பேசும் திறனையும் எழுதும் திறமையையும் விரைவில் முன்னேறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

7. இன்ன இடங்களில் க, ச, த, ப மிகும் என்பதைப் பிள்ளைகளுக்கு உதாரணத்துடன் அறிவித்து, இந்த அறிவைப் பாடங்கள் மூலமாகப் பெருக்கிப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பிள்ளைகளைப் பழக்குதல் நல்ல தொண்டாகும்.

8. ர, ற; ல, ள; ந, ண, ன—இவற்றின் வேறுபாடு விளங்கச் சொற்களில் இவற்றை வைத்து உச்சரிக்கப் பழக்குதலும், பொருளை அறிந்து கொள்ளுமாறு பழக்குதலும் மாணவரது தமிழ் அறிவிற்கு இன்றியமையாத அடிப்படையாகும்.

9. பாட்டுகளைச் சீர் பிரித்துப் பிழையின்றி வரிவரியாக எழுதப் பழக்குதல் மிகவும் நல்லது.

10. சுகாதாரம் முதலிய சிறப்புடைய செய்திகளின் விவரங்களைப் படங்கள், காட்சிகள், கதைகள் இவற்றின் மூலமாக நன்கு விளக்கி, அவற்றில் தகுந்த கவலை எடுத்துக்கொள்ளும்படி மாணவரைப் பழக்குதல் மாண்புடையதாகும்.

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	என் தாயார்	7
2.	என் தகப்பனார்	9
3.	என் உபாத்தியாயர்	11
4.	திசைகள்	13
5.	சிட்டுக் குருவி	15
6.	ஏன்?	16
7.	என்ன செய்கிறார்கள்?	19
8.	புத்தகம் இல்லாத பையன்	21
9.	மாம்பழம்—கணக்கு	23
10.	ஏன்?	26
11.	எங்கள் குடும்பம்	27
12.	எங்கள் வீட்டுத் தோட்டம்...	29
13.	தெருவில் நடந்த நிகழ்ச்சி	33
14.	என் தகப்பனார்—நான்	34
15.	காணாமற்போன சேவல்	36
16.	கிழமைகள்	38
17.	அமாவாசை—பௌர்ணமி	40
18.	எழுத்துகள்	42
19.	மாதங்கள்	44

20.	வீட்டுப் பறவைகள்	...	...	...	49
21.	எங்கள் பள்ளிக்கூடம்	...	...	...	50
22.	பள்ளிக்கூடத் தோட்டம்	...	...	...	53
23.	வண்டிகள்	...	...	...	56
24.	உன் விலாசம் என்ன?	...	...	...	59
25.	குதிரையின் வேகம்	...	...	...	62
26.	மா-பலா-வாழை	...	...	...	63
27.	எங்கள் கிராமம்	...	...	...	69
28.	ஆமையும் முயலும்	...	...	...	72
29.	நம் கடமை	...	...	...	79
30.	உலக நீதி	...	...	...	80

படம் பார்த்துப் படி.



படம் பார்த்துப் படி.



படம் பார்த்துப் படி.



படம் பார்த்துப் பெயர் எழுது.



படம் பார்த்துப் பெயர் எழுது.



படம் பார்த்துப் பெயர் எழுது.



காவேரி வாசகம்



1. என் தாயார்

புதிய சொற்கள் :—தாயார் - என்னை - எழுப்புகிறார் - நீராட - எனக்கு - உடை - உடுத்துகிறார் - உணவு - படைக்கிறார் - கற்பிக்கிறார் - அனுப்புகிறார் - அவரை - வணங்குகிறேன்.

என் தாயார்,

என்னைக் காலையில் எழுப்புகிறார்.

என்னை நீராடச் செய்கிறார்.

எனக்கு உடை உடுத்துகிறார்.

எனக்கு உணவு படைக்கிறார்.
எனக்குப் பாடம் கற்பிக்கிறார்.
என்னைப் பள்ளிக்கூடம் அனுப்புகிறார்.
அவரை நான் வணங்குகிறேன்.

கேள்விகள்

1. உன் தாயார் உனக்கு என்னென்ன செய்கிறார்?
2. நீ அவருக்கு என்ன செய்கிறாய்?
3. உன் தாயார் பெயர் என்ன?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களால் நிரப்பு:—

1. என் தாயார் என்னைக்———எழுப்புகிறார்.
2. என் தாயார்————கற்பிக்கிறார்.
3. என் தாயார்————உடை உடுத்துகிறார்.
4. அவரை நான் ———.

II. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல்; அவற்றைக் கற்பலகையில் எழுது.



2. என் தகப்பனர்

புதிய சொற்கள் :—தகப்பனர் - வாங்கி - தருகிருர் - சம்பளம் - கட்டுகிருர் - நாளும் - பள்ளிக்கு - அழைத்துப் போகிருர் - அன்பாய் - நடத்துகிருர்.

என் தகப்பனர்,

புத்தகம் வாங்கித் தருகிருர்.

உடைகள் வாங்கித் தருகிருர்.

பள்ளிக்கூடச் சம்பளம் கட்டுகிருர்.

நாளும் பாடம் கற்பிக்கிருர்.

பள்ளிக்கு அழைத்துப் போகிருர்.
என்னை அன்பாய் நடத்துகிருர்.
அவரை நான் வணங்குகிறேன்.
'அன்னையும் பிதாவும் முன்னறி
தெய்வம்.'

கேள்விகள்

1. உன் தகப்பனுர் பெயர் என்ன?
2. அவர் என்ன வேலை செய்கிருர்?
3. அவர் உனக்கு என்ன செய்கிருர்?
4. நீ அவருக்கு என்ன செய்கிருய்?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை நிரப்பு:—

1. என் தகப்பனுர் எனக்குப்——கற்பிக்கிருர்.
2. அவர் என்னை——நேசிக்கிருர்.
3. அவர் பள்ளிக்கூடச் சம்பளம்———.
4. அவரை நான்——.

II. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றைக் கற்பலகையில் எழுது.



3. என் உபாத்தியாயர்

புதிய சொற்கள் :—கணக்கு - பாட்டு - பாடச் செய்கிருர் - என்னுடன் - பாடுகிருர் - விளையாடுகிருர் - நேசிக்கிருர்.

என் உபாத்தியாயர்,
எனக்குப் பாடம் கற்பிக்கிருர்.
எனக்குக் கணக்குப் போதிக்கிருர்.
என்னைப் பாடச் செய்கிருர்.
என்னுடன் பாட்டுப் பாடுகிருர்.
என்னுடன் சேர்ந்து ஆடுகிருர்.
என்னை அன்புடன் நேசிக்கிருர்.
அவரை நான் வணங்குகிறேன்.
'குருவே துணை.'

கேள்விகள்

1. உன் உபாத்தியாயர் பெயர் என்ன?
2. அவர் உனக்கு என்ன கற்பிக்கிறார்?
3. நீ அவரை நேசிக்கிறாயா?
4. நீ அவருக்கு என்ன செய்கிறாய்?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

1. உபாத்தியாயர் எனக்குப் பாடம்——.
2. ——என்னைப் பாடச் ——.
3. —— ——க் கணக்கைப் போதிக்கிறார்.
4. உபாத்தியாயர் என்னுடன்——ப் பாடுகிறார்.

II. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றைக் கற்பலகையில் எழுது.

III. பதில் சொல்; எழுது:—

1. நீ இப் படத்தில் யார் யாரைப் பார்க்கிறாய்?
2. அவர்கள் என்னென்ன போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்?
3. உபாத்தியாயர் என்ன செய்கிறார்? பையன் என்ன செய்கிறான்?



4. திசைகள்

புதிய சொற்கள் :—காலையில் - தோன்றுகிறான் - பக்கம் - திசை - கிழக்கு - மாலையில் - மறைகிறான் - மறையும் - மேற்கு - பார்த்து - வலக்கை - இடக்கை - தெற்கு - வடக்கு.

சூரியன் காலையில் தோன்றுகிறான்.

சூரியன் தோன்றும் திசை **கிழக்கு.**

சூரியன் மாலையில் மறைகிறான்.

சூரியன் மறையும் திசை **மேற்கு.**

தம்பீ, நீ கிழக்கைப் பார்த்து நில்.

உன் கைகளை நேராக நீட்டு.

உன் வலக்கைப் பக்கம் தெற்கு.
உன் இடக்கைப் பக்கம் வடக்கு.

கேள்விகள்

1. உன் வீடு எந்தத் திசையில் இருக்கிறது?
2. உன் பாடசாலை எந்தத் திசையில் இருக்கிறது?
3. நீ எந்தத் திசை பார்த்துச் சாப்பிடுகிறாய்?
4. நீ எந்தத் திசையில் தலை வைத்துப் படுக்கிறாய்?
5. அப்பொழுது உன் கால் எந்தப் பக்கம் இருக்கிறது?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை:—

1. சூரியன் தோன்றும் பக்கம்———.
2. சூரியன்———பக்கம் மேற்கு.
3. சூரியன்——தோன்றுகிறான்.
4. சூரியன் மாலையில்——.

II. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றைப் பலகையில் எழுது.

III. 1. சூரியனைப் பற்றி நீ அறிந்ததைச் சொல்.
2. சந்திரனைப் பற்றி நீ அறிந்ததைச் சொல்.
3. ஆகாயத்தைப் பற்றி நீ அறிந்ததைச் சொல்.



5. சிட்டுக் குருவி

[பாட்டு]

1. சின்னச் சின்ன குருவி
சிங்காரச் சிட்டுக் குருவி
என்னுடனே ஆடவா
இனிய பாட்டுப் பாடிவா.

2. குந்திக் குந்தி நடந்துவா
கொண்டையைக் கொஞ்சம் குலுக்கிவா
சொந்தம் ஆகத் தின்னவே
சோறும் நெய்யும் தருகிறேன்.

6. ஏன்?

புதிய சொற்கள்:—நல்ல - வள்ளி - மேய்ப்பாள் - புறப்படு - ஓட்டிக்கொண்டு - போவாள் - அவளது - பின் செல்லும் - தின்ன - விருப்பம் - ஆனல் - வருவதே - இல்லே.

வள்ளி நல்ல பெண்.

அவள் ஆடுகள் மேய்ப்பாள்.

சூரியன் புறப்படுமுன் எழுவாள்.

ஆடுகளே ஓட்டிக்கொண்டு போவாள்.

அவள் நாய் பின் செல்லும்.
நரிக்கு ஆடுகளைத் தின்ன விருப்பம்.
ஆனால் நரி வருவதே இல்லை.

ஏன்?

கேள்விகள்

1. வள்ளிக்கு என்ன வேலை?
2. அவள் எப்போது எழுவாள்? நீ எப்போது எழுவாய்?
3. அவள் எழுந்து என்ன செய்வாள்?
4. நீ எழுந்து என்ன செய்வாய்?
5. அவள் பின்னால் போவது எது?
6. நரி ஏன் ஆடுகளைப் பிடிப்பது இல்லை?

பயிற்சி

I. நல்ல - எழுவாள் - விருப்பம் - இல்லை: இவற்றைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக அமைத்துப் படி:—

1. நரி வருவதே ——.
2. வள்ளி சூரியன் புறப்படு முன்——.
3. நரிக்கு ஆடுகளைத் தின்ன———.
4. வள்ளி———பெண்.

II. 1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றைப் பலகையில் எழுது.

2. நீ இக்கதையைச் சொல் ; பிறகு எழுது.
3. உனக்குத் தெரிந்த வேறு கதை ஒன்றைச் சொல்.

பயிற்சி—I

மேல் முன்பக்கம் வலப்பக்கம்
கீழ் பின்பக்கம் இடப்பக்கம்

I. இவற்றைத் தக்க இடங்களில் அமைத்துப் படி :—

1. மேஜையின்——விளக்கு இருக்கிறது.
2. மேஜையின்——கூடை இருக்கிறது.
3. எனக்கு——தம்பி விளையாடுகிறான்.
4. எனக்குப்——தங்கை விளையாடுகிறாள்.
5. என் ——தாயார் இருக்கிறார்.
6. என்——தகப்பனார் இருக்கிறார்.

II. 1. உன் வீட்டின் முன் பக்கம் என்ன இருக்கிறது?

2. உன் வீட்டின் பின் பக்கம் என்ன இருக்கிறது?

3. உன் பாடசாலையின் வலப் பக்கம் என்ன இருக்கிறது? இடப் பக்கம் என்ன இருக்கிறது?

4. உபாத்தியாயர் மேஜையின்மேல் என்ன இருக்கிறது? மேஜையின்கீழ் என்ன இருக்கிறது?

5. இவள் என்ன செய்கிறாள்? எந்தக் கையில் கண்ணாடி இருக்கிறது? எந்தக் கையில் சீப்பு இருக்கிறது?

6. மேல் × கீழ்
வலம் × இடம்
முன் × பின்
} இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உபயோகித்துப் பேசப் பழகு.

7. என்ன செய்கிறார்கள் ?

1. என் தாயார் —— ——.

2. என் தகப்பனார் —— ——.



3. என் அண்ணன் —— ——,

4. என் அக்காள் ——— ———.

5. நான் ரொட்டி ————.

6. நாய் என்னைப் ——.



கேள்விகள்

1. உன் தாயார் செய்யும் வேலைகள் எவை?
2. உன் அக்காள் செய்யும் வேலைகள் எவை?
3. உன் தகப்பனார் வீட்டில் என்ன செய்கிறார்?
4. நீ வீட்டில் என்ன வேலைகள் செய்கிறாய்?



8. புத்தகம் இல்லாத பையன்

புதிய சொற்கள் :—என்னிடம் - வழியில் - கண்ணனை - கண்டேன் - கண்ணனோடு - சென்றேன் - கண்ணனுக்கு- நண்பன் - பெரியவன் - கண்ணனது - கண்ணனிடம்- கண்ணா - படிப்போம்.

என்னிடம் பாட புத்தகம் இல்லை.
கண்ணன் வழியில் வந்தான்.
நான் கண்ணனைக் கண்டேன்.
நான் கண்ணனோடு போனேன்.
நான் கண்ணனுக்கு நண்பன்.

நான் கண்ணனை விடப் பெரியவன்.

இது கண்ணனது பெட்டி.

புத்தகம் கண்ணனிடம் உண்டு.

கண்ணா, நாம் படிப்போம் வா.

கேள்விகள்

1. உன் நண்பன் பெயர் என்ன ?
2. உன்னிடம் பாட புத்தகம் இருக்கிறதா ? இல்லையா ?
3. நீ உன் நண்பனை எப்படி அழைப்பாய் ?
4. நீ உன் நண்பனைவிடப் பெரியவனா ? சிறியவனா ?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. நான்——க் கண்டேன்.
2. கண்ணா,——படிப்போம்——.
3. இது———பெட்டி.

II. 1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை ? அவற்றைக் கற்பலகையில் எழுதிப் படி.

2. வழியில்—பெரியவன்—நண்பன் : இவற்றை உன் பேச்சில் அமைத்துப் பேசு.

3. உண்டு × இல்லை.

இவற்றைக் கோடிட்ட இடங்களில் தக்கபடி அமைத்துப் படி :—

வாழை மரத்திற்குக் கிளைகள்——.

மா மரத்திற்குக் கிளைகள்——.



9. மாம்பழம்—கணக்கு

புதிய சொற்கள் :—உனக்கு - வேண்டுமா - ஆம் - வேண்டும் - இல்லை - வேண்டா - போடுகிறேன் - சொன்ன - சொல்லாத - போடு - போடாதே.

தாயார் :— முருகா, உனக்கு மாம்பழம் வேண்டுமா?

முருகன் :—இல்லை. எனக்கு மாம்பழம் வேண்டா.

தாயார் :—வள்ளி, உனக்கு மாம் பழம் **வேண்டுமா**?

வள்ளி :—**ஆம்**. எனக்கு மாம்பழம் **வேண்டும்.**

தாயார் :— தம்பீ, நீ என்ன செய் கிறாய்?

முருகன் :—அம்மா, நான் கணக்குப் போடுகிறேன்.

தாயார் : — தம்பீ, உபாத்தியாயர் சொன்ன கணக்கைப் **போடு**; சொல்லாத கணக்கைப் **போடாதே**.

கேள்விகள்

1. தாயார் முருகனை என்ன கேட்டார்?
2. முருகன் என்ன பதில் சொன்னான்?
3. தாயார் வள்ளியை என்ன கேட்டார்?
4. வள்ளி என்ன பதில் சொன்னாள்?
5. போடு, போடாதே - இவ்விரண்டையும் தாயார் எப்படி உபயோகித்துப் பேசினார்?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. உபாத்தியாயர் ——— கணக்கைப் போடு.

2. உபாத்தியாயர் சொல்லாத கணக்கைப் ———.
3. நான் ———ப் போடுகிறேன்.

II. 1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றை வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. ஆம் × இல்லை
வேண்டும் × வேண்டா
போடு × போடாதே
சொன்ன × சொல்லாத
} இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உபயோகித்துப் பேசு.

3. நீ இந்தப் பாடத்தில் உள்ள படத்தில் என்னென்ன பார்க்கிறாய்? அவற்றின் பெயர்களைச் சொல்; எழுது.

4. தாயார் என்ன செய்கிறார்? உன் பதில் எழுது.

5. வள்ளி ஏன் கைகளை நீட்டுகிறாள்? உன் பதில் எழுது.

6. முருகன் என்ன செய்கிறான்? உன் பதில் எழுது.

10. ஏன்?

[பாட்டு]

1. சும்மா இருக்கிற சிட்டுக் குருவிக்குச்
சோற்றைப் போடுவானேன்?—அது
சொகுசாய்க் குந்திக் குந்தி நடந்தே
சுற்றி வருவானேன்?

2. கொம்பில் இருக்கிற குருவிக்கூட்டைக்
கோலால் கலைப்பானேன்?—அது
கொண்டையை நீட்டிக் கொண்டே
கொத்த வருவானேன்? [கையைக்

3. கும்மி அடிக்கிற பெண்க ளுடன்நீ
கூடிப் போவானேன்?—அங்குக்
குதித்துக் குதித்துக் கொட்டி டாமல்
குனிந்து நிற்பானேன்?

4. அம்மி பறக்க அடிக்கிற காற்றில்
ஆற்றுக்குப் போவானேன்?—அது
ஆற்று மணலைக் கண்களில் தூவ
அழுது வருவானேன்?



11. எங்கள் குடும்பம்

புதிய சொற்கள் : — இதுதான் - நால்வர் - எங்கள் - குடும்பம் - வீட்டை - கவனிக்கிறார் - சந்தோஷமாக - வாழ்கிறோம்.

இதுதான் எங்கள் வீடு.

இதில் நாங்கள் இருக்கிறோம்.

தாயார்-தகப்பனார்-தங்கை-நான்.

எங்கள் குடும்பம் நால்வரைக் கொண்டது.

என் தகப்பனுர் பணம் சம்பாதிக்கிருர்.
என் தாயார் வீட்டைக் கவனிக்கிருர்.
நானும் தங்கையும் பாடம் படிக்கிறேம்.
நால்வரும் சந்தோஷமாக வாழ்கிறேம்.

கேள்விகள்

1. உன் வீட்டில் எத்தனை பேர் இருக்கிருர்கள் ?
2. யார் யார் என்ன என்ன வேலை செய்கிருர்கள் ?
3. உங்கள் குடும்பம் எத்தனை பேரைக் கொண்டது ?
4. உங்கள் வகுப்பில் எத்தனை பேர் படிக்கிருர்கள் ?

பயிற்சி

I. உன் வீட்டை மனத்தில் வைத்து, கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. எங்கள் குடும்பம் —— கொண்டது.
2. என் தகப்பனுர் பணம் ——.
3. என் —— வீட்டைக் ——.

II. 1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை ?

2. ஒன்று—ஒருவர் } இப்படியே பத்துவரை
இரண்டு—இருவர் } கூறு.

3. குடும்பம்—சந்தோஷமாக—நால்வர்—வாழ்கிறேம் : இவற்றை உபயோகித்துப் பேசு ; தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

12. எங்கள் வீட்டுத் தோட்டம்

புதிய சொற்கள் : — நிலத்தை - கொத்துகிருர் - பாத்திகள் - தண்ணீர் - மொள்ளுகிருர் - செடிக்கு - ஊற்றுகிருர் - தினமும் - தோட்ட வேலை - செய்வோம் - சிறிய.

இதுதான் எங்கள் வீட்டுத் தோட்டம்.

என் தகப்பனுர் நிலத்தைக் கொத்துகிருர்.

நான் பாத்திகள் கட்டுகிறேன்.

தாயார் தண்ணீர் மொள்ளுகிருர்.

தங்கை செடிக்குத் தண்ணீர் ஊற்று கிருள்.

நாங்கள் தினமும் தோட்ட வேலை செய்வோம்.

எங்கள் தோட்டம் சிறிய தோட்டம்.

உங்கள் தோட்டம் பெரிய தோட்டம்.

கேள்விகள்

1. உங்கள் வீட்டுக்குப் பின் தோட்டம் உண்டா?
2. உங்கள் தோட்டத்தில் உள்ள மரங்கள் எவை?
3. உங்கள் தோட்டத்தில் உள்ள செடிகள் எவை?
4. உங்கள் தோட்டத்தில் பூக்கும் பூக்கள் எவை?
5. நீ தோட்டத்தில் என்ன வேலை செய்கிருய்?

பயிற்சி—1

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. இதுதான் —— வீட்டுத் ——.
2. தகப்பனுர் ——க் கொத்துகிருர்.
3. எங்கள் தோட்டம் —— தோட்டம்.
4. உங்கள் தோட்டம் —— தோட்டம்.

II. 1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றை உபயோகித்துப் பேசு.

2. தாயார்—பெண்

தகப்பனுர்—ஆண்

தங்கை—பெண்

தம்பி—ஆண்

குறிப்பு :—இப்படியே மற்ற ஆண் - பெண் பெயர்களைச் சொல்.

பயிற்சி—2

நிறங்கள்

பச்சை	வெண்மை	கறுப்பு
மஞ்சள்	சிவப்பு	நீலம்

I. கட்டத்தில் உள்ள சொற்களில் தகுந்ததைக் கோடிட்ட இடங்களில் அமைத்துச் சொல்.

1. காகம் — நிறம்.
2. ஆகாயம் — நிறம்.
3. மிளகாய் — நிறம்.
4. மிளகாய் வற்றல் — நிறம்.
5. சுண்ணும்பு — நிறம்.
6. எலுமிச்சம் பழம் — நிறம்.

II. 1. கிளி, பால், இலை, அடுப்புக்கரி, மஞ்சள், கிழங்கு, இரத்தம், சோறு—இவற்றின் நிறம் என்ன ?

2. மஞ்சள், கறுப்பு, நீலம், வெண்மை—இந்த நிறங்களை உடைய இரண்டு இரண்டு பொருள்களைக் கூறு.

பயிற்சி—3

சுவை—6

இனிப்பு	உறைப்பு	கசப்பு
துவர்ப்பு	உவர்ப்பு	புளிப்பு

I. கோடிட்ட இடங்களில் கட்டத்தில் உள்ள சொற்களில் தக்கதை அமைத்துப் படி :—

1. புளியங்காய்—. 4. பாகற்காய்—.
2. வாழைப் பூ—. 5. வெல்லம்—.
3. மிளகாய் —. 6. உப்பு—.

II. 1. இஞ்சி, வெல்லம், கடுக்காய், வேப்பங்காய்—இவற்றின் சுவை என்ன?

2. நிறமும் சுவையும் சொல்:—வாழைக் கச்சல், வாழைப் பழம், மாவடு, பலாச் சுளை, தேன், மிளகு.

3. ஒவ்வொரு சுவைக்கும் வேறு இரண்டு பொருள்கள் கூறு.

4. இனிப்பு - துவர்ப்பு - உறைப்பு - கசப்பு - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகப்படுத்து.

13. தெருவில் நடந்த நிகழ்ச்சி

படம் பார்த்து விஷயம் சொல்:—



கேள்விகள்

1. நீ இப்படத்தில் அறிவது என்ன?
2. பையன் ஏன் ஆபத்தில் அகப்பட இருந்தான்?
3. நீ பெரிய பையனை விரும்புகிறாயா? ஏன்?

குறிப்பு:—'வழியில் பார்த்து நட' என்பதைப் பற்றிப் பிள்ளைகளுக்குத் தெளிவாக விளக்குதல் நலம்.



14. என் தகப்பனுர்—நான்

புதிய சொற்கள் : — போல - சிறுவராக - எல்லோருக்கும் - நல்லவர் - பெரிய - வேலையில் - அமர்ந்தார் - பாடு - பட்டார் - பணம் - சேர்த்தார் - கட்டினர் - நிலம் - அதே - ஏழைகளுக்கு - தருமம் - ஆவேன்.

என் தகப்பனுர்,

என்னைப் போலச் சிறுவராக இருந்தார்.

என்னைப் போல நன்ருய்ப் படித்தார்.

பெரிய வேலையில் அமர்ந்தார்.

பாடு பட்டார், பணம் சேர்த்தார்.

வீடு கட்டினுர், நிலம் வாங்கினுர்.
இன்றும் பெரிய வேலையில் இருக்கிறுர்.
இன்றும் ஏழைகளுக்குத் தருமம் செய்கிறுர்.
அன்றும் நல்லவர், **இன்றும்** நல்லவர்.
அவரைப் போல நானும் ஆவேன்.

கேள்விகள்

1. உன் தகப்பனுர் என்ன வேலை செய்கிறுர்?
2. அவருக்கு வீடு உண்டா? நிலம் உண்டா?
3. நீ என்ன வேலை செய்வாய்?

பயிற்சி

1. உன் தகப்பனுரைப் பற்றித் தெரிந்ததைச் சொல்.
2. உனக்கு என்ன செய்ய விருப்பம்?
3. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்களைச் சொல்.
4. சிறியவர் × பெரியவர்
நல்லவர் × கெட்டவர்
ஏழை × பணக்காரன்
இன்று × அன்று
} இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உபயோகித்துப் பேசு.



15. காணமற் போன சேவல்

[பாட்டு]

1. என்சேவல் போன இடம்
எனக்குத்தெரி யாதே!
என் றன் துரை ஏழுமலை
என்னசொல்லு வாரோ!

2. என்னசொல்லு வாரோ அவர்க்
கிஷ்டமுள்ள சேவல்.
இஷ்டமுள்ள சேவல்தனை
எவளோபிடித் தாளே!

3. நல்லசிறு தொட்டில்கட்டி
நான்வளர்த்த சேவல்;
நான்வளர்த்த சேவல்தனை
நடுங்கவைத்தவள் யாரோ!

4. தங்கத்தினுல் சதங்கைகட்டித்
தரையில்விட்ட சேவல்;
தரையில்விட்ட சேவல்தனைத்
தடுத்துக்கொண்டவள் யாரோ!

5. ஐந்துநிறம் பொருந்தியுள்ள
அன்ன நடைச் சேவல்;
அன்ன நடைச் சேவல்தனை
அழைத்துக்கொண்டவள் யாரோ!

6. கோட்டைகொத்த ளங்கள்ஏறிக்
கூவிவரும் சேவல்;
கூவிவரும் சேவலுக்குக்
கொடுமை செய்தவள் யாரோ!

—சேவல் பாட்டு

16. கிழமைகள்

புதிய சொற்கள் : — நேற்று - சனி - கிழமை - இன்று - ஞாயிறு - திங்கள் - செவ்வாய் - புதன் - வியாழன் - வெள்ளி - அதற்கு - அடுத்தது - இவ்விதம் - நாட்கள் - வாரம்.

நேற்று சனிக் கிழமை.

இன்று ஞாயிற்றுக் கிழமை.

நாளை திங்கள் கிழமை.

திங்களுக்கு அடுத்தது செவ்வாய்க் கிழமை.

செவ்வாய்க்கு அடுத்தது புதன் கிழமை.

புதனுக்கு அடுத்தது வியாழக் கிழமை.

வியாழனுக்கு அடுத்தது வெள்ளிக் கிழமை.

வெள்ளிக்கு அடுத்தது சனிக் கிழமை.

இவ்விதம் **ஏழு நாட்கள்** வருகின்றன.

திங்கள் - செவ்வாய் - புதன் - வியாழன் - வெள்ளி - சனி - ஞாயிறு.

ஏழு நாட்கள் ஒரு வாரம் ஆகும்.

கேள்விகள்

1. இன்று என்ன கிழமை? நேற்று என்ன கிழமை? நாளை என்ன கிழமை?
2. ஏழு நாட்கள் எவை?
3. ஒரு வாரத்தில் பள்ளிக்கூடம் இல்லாத கிழமைகள் எவை?
4. நீ அந்த நாட்களில் என்ன செய்வாய்?
5. நீ எண்ணெய் தேய்த்துக்கொள்ளும் நாட்கள் எவை?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. இன்று வியாழக் ——.
2. —— வெள்ளிக் கிழமை.
3. நேற்றுப் —— கிழமை.
4. ஏழு —— ஒரு ——.

II. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை? அவற்றைப் பலகையில் எழுது.

———

17. அமாவாசை—பௌர்ணமி

புதிய சொற்கள் :— இன்று - வட்டமாக - பௌர்ணமி - காயும் - இல்லாத - அமாவாசை - அன்று - இருளாய் - வளரும் - தேயும் - ஆகிவிடும் - மறுநாள் - தொடங்கும் - போது - வளர்பிறை - தேய்பிறை.

சந்திரன் இன்று வட்டமாக இருக்கிறது.
இந்த நாள் **பௌர்ணமி** ஆகும்.
இன்று இரவு நிலாக் காயும்.
சந்திரன் இல்லாத நாளும் உண்டு.
அந்த நாள் **அமாவாசை** ஆகும்.
அன்று இரவு இருளாய் இருக்கும்.

அன்று முதல் சந்திரன் வளரும்.
பதினைந்து நாட்களில் வட்டம் ஆகிவிடும்
மறுநாள் முதல் தேயத் தொடங்கும்.
பதினைந்து நாட்களில் தேய்ந்தே விடும்.
வளரும்போது **வளர்பிறை** எனப்படும்.
தேயும்போது **தேய்பிறை** எனப்படும்.

கேள்விகள்

1. சந்திரன் இல்லாத நாள் எது?
2. சந்திரன் வட்டமாக இருக்கும் நாள் எது?
3. வளர்பிறை எதுமுதல் ஆரம்பம் ஆகும்?
4. எதுமுதல் தேய்பிறை ஆரம்பம் ஆகும்?
5. சந்திரன் வட்டமாக எத்தனை நாட்கள் ஆகும்?
6. சந்திரன் தேய்ந்துபோக எத்தனை நாட்கள் ஆகும்?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை:—

1. ———சந்திரன் வட்டமாக இருக்கும்.
2. ———சந்திரனே இராது.
3. ———முதல் சந்திரன் வளரும்.
4. ———முதல் ——— தேயும்.

II. 1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை?

2.
அந்த	×	இந்த	இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உபயோகித்துப் பேசப் பழகு.
வளர்பிறை	×	தேய்பிறை	
நிலா	×	இருள்	

———

18. எழுத்துகள்

புதிய சொற்கள் :—கரி - கறி ; உரி - உறி ; கரை - கறை ; மலை - மழை ; வலை - வளை.

ர



அடுப்புக் கரி



தேங்காய் உரி



குளக் கரை

ற



காய் கறி



இது உறி



ஆடையில் கறை

ல ழ



மலை



மழை



மீன் வலை



எலி வளை

பலம்—பழம் தலை—தளை—தழை

கல்—கள் அலை—அளை—அழை

பால்—பாழ் கலை—களை—கழை

விலை—விளை

அவல்—அவள்

வெல்லம்—வெள்ளம்

குறிப்பு :—இவற்றை வேறுபாடு தோன்ற உச்சரிக்கப் பழக்குக.

பயிற்சி

கோடிட்ட இடத்தில் தக்க எழுத்தை அமைத்துப் படி :—

1. கதவைத் தி——. தோலை உ——. பழத்தைப் ப——.
2. இந்த ஏ—— பெரியது. மரம் ஏ——ப் பறி.
3. மீன் வ——. வில் வ——. தம்பியை அ——.
4. வா—— இழு. வா—— மீன். வா——க் காய்.

---

19. மாதங்கள்

குறிப்பு :—24 மாதப் பெயர்களும் புதியவையே. அவற்றை மனப்பாடம் செய்யப் பழக்குக. புதிய எழுத்தான ஜூ-வைக் கற்பிக்கவும்.

தமிழ் மாதங்கள் 12.

1. சித்திரை	2. வைகாசி	3. ஆனி
4. ஆடி	5. ஆவணி	6. புரட்டாசி
7. ஐப்பசி	8. கார்த்திகை	9. மார்கழி
10. தை	11. மாசி	12. பங்குனி

ஆங்கில மாதங்கள் 12.

1. ஜனவரி 2. பிப்ரவரி 3. மார்ச்
4. ஏப்ரல் 5. மே 6. ஜூன்
7. ஜூலை 8. ஆகஸ்ட் 9. செப்டம்பர்
10. அக்டோபர் 11. நவம்பர்
12. டிஸம்பர்

பன்னிரண்டு மாதம் ஒரு வருஷம்.

ஏப்ரல் மாதத்தில் தமிழ் வருஷம் (சித்திரை மாதம்) ஆரம்பம் ஆகும்.

ஆங்கிலம்	**தமிழ்**
ஏப்ரல்	சித்திரை
மே	வைகாசி
ஜூன்	ஆனி
ஜூலை	ஆடி
ஆகஸ்ட்	ஆவணி
செப்டம்பர்	புரட்டாசி
அக்டோபர்	ஐப்பசி

நவம்பர்	கார்த்திகை
டிஸம்பர்	மார்கழி
ஜனவரி	தை
பிப்ரவரி	மாசி
மார்ச்	பங்குனி

கேள்விகள்

1. இது என்ன மாதம்? (தமிழ்—ஆங்கிலம்)
2. நீ எந்த மாதத்தில் பள்ளியில் சேர்ந்தாய்? (தமிழ்—ஆங்கிலம்)
3. உன் பள்ளிக்கூடம் எந்த மாதத்தில் திறக்கப் பட்டது?
4. உனக்கு எங்தெந்த மாதங்களில் விடுமுறை உண்டு?
5. தீபாவளி எந்த மாதத்தில் வரும்?
6. நீ எந்த மாதத்தில் பிறந்தாய்? (உன் பெற்ருேரைக் கேட்டுச் சொல்.)

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தக்க மாதப் பெயர்களே அமைத்துப் படி :—

1. நடக்கிறது ——— மாதம். (ஆங்கிலம்—தமிழ்)
2. போனது ——— மாதம்.
3. வருவது ——— மாதம்.

———

பயிற்சி—4



ஷ ஹ ஸ ஜ க்ஷ

ஷ் ஹ் ஸ் ஜ் க்ஷ்



கோடிட்ட இடத்தில் இந்த எழுத்துகளைக் கொண்ட சொற்களை அமைத்துப் படி:—

1. இவன் ராஜா —— போடுபவன்.
2. இது ரோஜா ——.
3. இது —— படம்.
4. இது —— படம்.
5. இது முத்து ——.
6. இது என் பாத ——.

பயிற்சி

கஷ்டம்	ஹநுமான்	பக்ஷணம்	ரஸம்
நஷ்டம்	ஆஹா	பக்ஷம்	சரஸ்வதி
இஷ்டம்	ஹாரம்	பக்ஷி	
வேஷ்டி	ஹோமம்	கக்ஷி	

கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. இது முத்து———.
2. வேலை இல்லாததால்——அதிகமாக இருக்கிறது.
3. உன்———ப்படி செய்.
4. வியாபாரத்தில்———உண்டானது.
5. ———இராம தூதன்.
6. தீபாவளிக்காகப் புதிய——வாங்கினேன்.
7. புரோகிதர்——வளர்க்கிறார்.
8. ——இனிப்பாக இருக்கிறது.
9. அரசன் குடிகளிடம்——உடையவன்.
10. இந்தப் ——யின் பெயர் காகம்.
11. நீ எந்தக் ——யைச் சேர்ந்தவன் ?
12. சோற்றில் —— ஊற்று.
13. இது —— படம்.
14. —— இது எவ்வளவு அழகாக இருக்கிறது !

20. வீட்டுப் பறவைகள்

[பாட்டு]

1. ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. சின்னஞ் சிறுகுருவி போல—நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனத்தில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா.

3. கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்கை—அதற்கு
இரக்கப் படவேண்டும் பாப்பா.

—பாரதியார்



21. எங்கள் பள்ளிக்கூடம்

புதிய சொற்கள் :—விளையாட்டு - மைதானம் - கால்பந்து - கைப்பந்து - தண்டால் - தலைமை - ஆசிரியர் - கிராமம் - கவனித்து - போதிப்பவர்கள்.

இது என் பள்ளிக்கூடம். இதன் முன் பக்கம் விளையாட்டு மைதானம் இருக்கிறது. இதன் பின் பக்கம் பெரிய தோட்டம் இருக்கிறது.

விளையாட்டு மைதானத்தில் சிலர் கால்பந்து ஆடுவார்கள்; சிலர் கைப்பந்து ஆடுவார்கள்; சிலர் ஓடுவார்கள்; சிலர்

ஊஞ்சல் ஆடுவார்கள்; சிலர் தண்டால் எடுப்பார்கள்.

பள்ளிக்கூடத்தில் எட்டு அறைகள் உண்டு. ஐந்து அறைகளில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன. ஆறும் அறை தலைமை ஆசிரியர் அறை. ஏழாம் அறை பள்ளிக்கூடச் சாமான்கள் வைக்கும் அறை. எட்டாம் அறை ஆசிரியர்கள் அறை.

என் பள்ளிக்கூடம் கிராமப்பாடசாலை. இதில் இருக்கும் ஆசிரியர்கள் நல்லவர்கள்; கவனித்துப் பாடம் போதிப்பவர்கள். நாங்கள் அவர்களை அன்பாய் நேசிக்கிறோம்; வணங்குகிறோம்.

கேள்விகள்

1. பிள்ளைகள் எந்த விதமான விளையாட்டுகளை ஆடுகிறார்கள்?
2. பள்ளிக்கூட விளையாட்டுகள் எவை?
3. வீட்டு விளையாட்டுகள் எவை?
4. உன் பள்ளிக்கூடத்தில் எத்தனை அறைகள் இருக்கின்றன? அவற்றின் உபயோகம் என்ன?
5. உன் ஆசிரியர்கள் எப்படிப்பட்டவர்கள்?

பயிற்சி

1. உன் பள்ளிக்கூடத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்.

2. விளையாடும் இடத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்.

3. உன் ஆசிரியர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்.

4. மேஜை, நாற்காலி, கரும்பலகை, கற்பலகை—இவற்றின் உபயோகம் என்ன ?

5. பள்ளிக்கூடச் சாமான்களில் மரச் சாமான்கள் எவை? இரும்புச் சாமான்கள் எவை ?

6. பாட சம்பந்தமான அட்டைகள், படங்கள், கரும்பலகை, சீமைச் சுண்ணும்பு, கரும்பலகையைத் துடைக்கும் துணி, பள்ளிக்கூட மணி—இவை பள்ளிக்கூடத்தில் எங்கு எங்கு இருக்கும் ?

7. மேஜை, நாற்காலி, புத்தகம், எழுதுகோல், மைக்கூடு—இவை எந்த எந்தக் கடைகளில் கிடைக்கும் ?

8. பள்ளிக்கூட மணியைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்.

9. அதுவே தன் வேலையைச் சொல்வதுபோலச் சொல்.

10. கரும்பலகை தன் உபயோகத்தைச் சொல்வது போலச் சொல்.



22. பள்ளிக்கூடத் தோட்டம்

(சம்பாஷணை)

புதிய சொற்கள் :—கோவிந்தன் - வேலன் - வேலா - நூற்று- ஐம்பது - எல்லோரும் - அதனல் - எல்லா - கட்டி - பூண்டு - பொறுக்கி - எறிவார்கள் - உடைப்பார்கள் - இறைப்பார்கள் - வாய்க்கால் - வழியே - பாய்ச்சுவார் கள் - காட்டியபடியே - கவனித்துக்கொண்டு - உதவி- பிரியம் - அதற்காகவே - சேர்வேன்.

கோவிந்தன் :—வேலா, உங்கள் பள்ளிக் கூடத் தோட்டம் பெரியதாக இருக் கிறதே!

வேலன்:—ஆம். எங்கள் பள்ளியில் நூற்று ஐம்பது பேர் படிக்கின்றனர். அவர்

கள் எல்லோரும் தோட்டவேலை செய்ய வேண்டும். அதனால் தோட்டம் பெரியதாக இருக்கிறது.

கோவிந்தன்:—எல்லாப் பிள்ளைகளுமா வேலை செய்கிறார்கள்? என்ன என்ன வேலை செய்கிறார்கள்?

வேலன்:—சிறு பிள்ளைகள் தோட்டத்தில் உள்ள மண்கட்டி, புல், பூண்டு இவற்றைப் பொறுக்கி எறிவார்கள். பெரிய பிள்ளைகள் நிலத்தைக் கொத்துவார்கள்; மண்கட்டிகளை உடைப்பார்கள்; பாத்திகள் கட்டுவார்கள்; விதை விதைப்பார்கள்; நீர் இறைப்பார்கள்; வாய்க்கால் அமைப்பார்கள்; அதன் வழியே நீர் பாய்ச்சுவார்கள்.

கோவிந்தன்:—ஆசிரியர்களும் தோட்ட வேலை செய்வார்களோ?

வேலன்:—ஆம். அவர்கள் காட்டியபடியே நாங்கள் செய்வோம். அவர்கள் எங்கள் வேலைகளைக் கவனித்துக்

கொண்டு இருப்பார்கள் ; வேண்டும் உதவி செய்வார்கள்.

கோவிந்தன்:—வேலா, உங்கள் தோட்டம் நன்ருக இருக்கிறது. எனக்குத் தோட்டவேலையில் விருப்பம் அதிகம். நான் அதற்காகவே இப் பள்ளியில் சேர்வேன்.

கேள்விகள்

1. தோட்டத்தில் பிள்ளைகள் என்ன வேலைகளைச் செய்வார்கள் ?

2. ஆசிரியர்கள் என்ன வேலைகள் செய்வார்கள் ?

3. உன் பள்ளிக்கூடத்தில் தோட்டம் உண்டா ? நீ அதில் என்ன வேலை செய்கிருய் ?

4. உன் பள்ளிக்கூடத் தோட்டத்தில் உள்ள மரங்கள் எவை ? செடிகள் எவை ? பூக்கள் எவை ?

5. தோட்ட வேலைக்கு உபயோகப்படும் சாமான்கள் எவை ?

பயிற்சி

1. மண்வெட்டி, கூடை, மண்குடம், செப்புத் தவலை— இவற்றைச் செய்பவர் யார் ? இவை எங்கே கிடைக்கும் ?

2. பொறுக்கி, பாய்ச்சு, இறைப்பார்கள், காட்டிய படியே—இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. மண்வெட்டி, கடப்பாரை, மண்குடம், தாம்புக் கயிறு—இவற்றின் உபயோகம் என்ன ?

23. வண்டிகள்

புதிய சொற்கள் : — ஒருவன் - இழுத்து - கட்டை - வேறு - இழுக்கப்படுவதால் - எனப்படும் - செங்கல் - கருங்கல்- சுண்ணும்புக்கல் - ஏற்றி - மிகவும் - சந்தை - கூடும் - காணலாம் - இரட்டை - ஒற்றை - வகைப்படும் - வேகமாக.

இது **கை வண்டி**. ஒருவன் இதை இழுத்துப்போவான். இதில் கட்டைகளும் வேறு சாமான் களும் கொண்டுபோகப்படும். இது கையால் இழுக்கப்படு வதால் கைவண்டி எனப்படும்.



இது **மொட்டை வண்டி**. இதனை இரண்டு மாடுகள் இழுத்துச் செல்லும். இது செங்கல், கருங்கல், சுண்ணும்புக் கல் முதலிய பொருள்களை ஏற்றிச் செல்லும். இது கிராமங்களில் மிகவும் உபயோகப்படு கிறது. சந்தை கூடும் இடங்களில் பல மொட்டை வண்டிகளைக் காணலாம்.



இது கூண்டு வண்டி. இது, ஒற்றை



மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி என்று இரண்டு வகைப்படும். இந்த இரண்டு வண்டிகளும் மனிதரையும் சாமான்களையும் ஏற்றிச் செல்லும்.

இது குதிரை வண்டி. இதுவும் மனிதரையும் சாமான்களையும் ஏற்றிச் செல்லும். இது மாட்டுவண்டியை விடவேகமாய்ச் செல்லும்.



கேள்விகள்

1. கை வண்டி என்றால் என்ன? அதன் உபயோகம் என்ன?

2. மொட்டை வண்டியால் என்ன பயன்?

3. கூண்டு வண்டி எத்தனை வகைப்படும்?

4. இந்த வண்டிகளை எல்லாம் பார்க்கத் தக்க பொது இடம் எது?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. மொட்டை —— இரண்டு —— இழுக்கும்.

2. இது —— மிகவும் உபயோகப்படுகிறது.

3. குதிரை —— மாட்டு —— விட ——ப் போகும்.

II. குதிரை வண்டி என்னென்ன பொருள்களால் ஆக்கப்பட்டது? அவற்றை எங்கே வாங்கலாம்?

III. 1. ஏற்றி—ஒற்றை—இரட்டை—சந்தை: இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூறுக.

2. உன் ஊரில் என்னென்ன வண்டிகள் இருக்கின்றன? அவற்றின பயன் என்ன? விளக்கமாகக் கூறு.

3. நீ எந்த வண்டியில் அல்லது வண்டிகளில் பிரயாணம் செய்திருக்கிருய்? உன் அநுபவத்தை விளக்கமாகச் சொல்.

4. மாட்டு வண்டி, கைவண்டி, மொட்டை வண்டி — இவற்றுக்கு உள்ள வேறுபாடுகள் எவை? பதில் சொல்.

5. இந்த வண்டிகளில் உள்ள பல பாகங்களின் பெயர்களைச் சொல்.



24. உன் விலாசம் என்ன ?

புதிய சொற்கள் :—சென்று - வாசிப்பவன் - என்ருன் - நல்லது - கேட்கும் - கேள்விகள் - பதில் - சொல்வாயா - கேளுங்கள் - தெரிந்த - அளவில் - சொல்வேன் - திருவள்ளுவர் - கண்ணபிரான் - வைத்தியம் - விலாசம் - மதுரை - சமர்த்தன் - கடவுள் - காப்பாராக.

முருகனும் கண்ணனும் நண்பர்கள். முருகன் கண்ணனைத் தன் தகப்பனுரிடம் அழைத்துச் சென்று, "அப்பா, இவன் என் வகுப்பில் வாசிப்பவன். இவன் பெயர் கண்ணன். நான் இவனை இங்கு அழைத்து வந்தேன்" என்ருன்.

தகப்பனார்.—நல்லது. கண்ணா, உட்கார்.

[கண்ணன் பாயில் உட்காருகிறான்.]

தகப்பனார்.—கண்ணா, நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வாயா?

கண்ணன்.—ஐயா, கேளுங்கள். தெரிந்த அளவில் பதில் சொல்வேன்.

தகப்பனார்.—இந்த ஊரின் பெயர் என்ன?

கண்ணன்.—இந்த ஊரின் பெயர் மதுரை.

தகப்பனார்.—நீ எந்தத் தெருவில் இருக்கிறாய்?

கண்ணன்.—நான் திருவள்ளுவர் தெருவில் இருக்கிறேன்.

தகப்பனார்.—உன் தகப்பனார் பெயர் என்ன?

கண்ணன்.—என் தகப்பனார் பெயர் கண்ணபிரான் பிள்ளை.

தகப்பனார்.—அவர் என்ன வேலை செய்கிறார்?

கண்ணன்.—அவர் வைத்தியம் செய்கிறார்.

தகப்பனார்.—உன் வீட்டின் எண் என்ன?

கண்ணன்.—என் வீட்டின் எண் 50.

தகப்பனார்.—நீ சொன்னவை எல்லாம் சேர்த்துச் சொல். அதுவே உன் **விலாசம்** ஆகும். அது எழுதப்பட்ட தபால்கடிதம் உனக்கு வந்து சேரும்.

கண்ணன்.—'மதுரை, திருவள்ளுவர் தெரு, 50-ஆம் எண் உள்ள வீட்டில் இருக்கும் வைத்தியர் கண்ணபிரான் பிள்ளை மகன் கண்ணன்'—இதுவே எனது விலாசம்.

தகப்பனார்.—தம்பீ, நீ சமர்த்தன். நீ முருகனை உன் தம்பியாக நினை. அவனையும் உன்னைப் போலச் சமர்த்தன் ஆக்கு. கடவுள் உன்னைக் காப்பாராக!

கேள்விகள்

1. தகப்பனார் கண்ணனைக் கேட்ட கேள்விகள் எவை?
2. அவன் என்ன பதில் சொன்னான்?

3. நீ அவற்றுக்கு என்ன பதில் சொல்வாய்?
4. உன் விலாசம் என்ன?

பயிற்சி

1. நீ முருகன் தகப்பனாராக இருந்து, கோவிந்தனைக் கேள்விகள் கேள்.

2. கோவிந்தா, நீ கண்ணனைப் போல இருந்து, பதில் சொல்.



25. குதிரையின் வேகம்

1. குன்றுகள் மலைகள் தாண்டிக் குதிரை
குதித்துப் போவதைப் பார்.
என்றும் இல்லா வேகத் தோடே
எதிரே போவதைப் பார்.

2. காடு மலைகள் செடிகள் எல்லாம்
கலங்கப் போவதைப் பார்.

வீடு வாசல் தூளாய்ப் போக
விசையாய்ப் போவதைப் பார்.

3. மலையில் இருக்கும் சிங்கம் யானை
மயங்கப் போவதைப் பார்.
தலையை அசைத்தே இலைகள்
எல்லாம்
சலசல என்பதைப் பார்.

—தேசிங்கு ராஜன் கதை

---

26. மா-பலா-வாழை

புதிய சொற்கள் :—அடியில் - கொத்துக் கொத்தாக - தொங்குவது - பிஞ்சு - வடு - ஊறுகாய் - வற்றல் - குழம்பு - உடம்புக்கு - தின்னுதவர் - தோரணம் - முதலியன - முள்ளாக - சுளை - கொட்டை - பாகங்கள் - வாழைத் தாறு - மேல் நோக்கி - குருத்து - பட்டை - தண்டு - முக்கனிகள்.



இது என்ன மரம்? இது **மாமரம்**. இதன் அடியில் இருப்பது **மாங்கன்று**. மாங்காய்கள் **கொத்துக் கொத்தாகத்**

தொங்குவதைப் பார்: மாம் பிஞ்சு வடு எனப்படும். மாவடுவை ஊறுகாய் போட லாம். மாங்காயையும் ஊறுகாய் போட லாம். மாங்கொட்டை வற்றல் குழம்பு உடம்புக்கு நல்லது. மாம்பழம் தின்னுத வர் இல்லை. மா இலை தோரணம் கட்ட உதவும். மாம்பலகையால் பெட்டி, பலகை முதலியன செய்யலாம்.

இது என்ன மரம்? இது **பலா மரம்.** பலாக் காய்கள் தொங்குவதைப் பார்:



நாம் பலா இலையில் சாப்பிட லாம். பலாக்காய் கறி சமைக்க உதவும். பலாப் பழத்தின் தோல் முள் முள் ளாக இருக்கும். பழத்தின் உள்ளே சுளை இருக்கும். பலாச்சுளை இனிப்பாக இருக்கும். சுளைக் குள் கொட்டை உண்டு. பலாக்கொட்டை கறி சமைக்க உதவும். பலாப் பலகையால் பெட்டி, பலகை முதலியன செய்யலாம்.

இது என்ன மரம்? இது **வாழை மரம்.** இதன் அடியில் இருப்பது **வாழைக் கன்று.** வாழையின் எல்லாப் பாகங்களும் நமக்கு உதவும். வாழைத் தாறு தொங்குவதைப் பார்: அதன் நுனியில் வாழைப் பூ இருக்கிறது. காய்கள் **சீப்புச் சீப்பாக** இருக்கின்றன. வாழைக் குருத்து மேல் நோக்கி இருப்பதைப் பார்: வாழைப் பட்டை இலையாக உதவும். நாம் வாழை இலையில் சாப்பிடலாம். வாழைப்பூ, காய், தண்டு இவை கறி சமைக்க உதவும். வாழைப்பழம் இனிப்பாக இருக்கும்.



மாம் பழம் - பலாப் பழம் - வாழைப் பழம் இவை மூன்றும் **முக்கனிகள்** எனப் படும்.

கேள்விகள்

1. மா மரத்தால் என்ன பயன்?
2. பலா மரத்தால் என்ன நன்மை?
3. வாழை மரத்தின் உபயோகம் என்ன?

4. முக்கனிகள் எவை? அவற்றின் நிறம் என்ன? சுவை என்ன?

பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:—

1. மாங்கொட்டை —— குழம்பு உடம்புக்கு ——.

2. மா இலை —— கட்ட ——.

3. பலா —— சாப்பிடலாம்.

4. வாழைத் —— கீழே தொங்குகிறது.

II. கொத்துக் கொத்தாய், சீப்புச் சீப்பாய், முள் முள்ளாய்—இவை எப்பொழுதும் இப்படி இரட்டையாகவே வரும். இவற்றைப் போன்ற வேறு சில பதங்கள் சொல்.

III. தின்னுதவர், பாகங்கள், தோரணம்—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

IV. நாம் உணவு வைத்துச் சாப்பிடத்தக்க வேறு இலைகள் எவை?

V. உனக்குத் தெரிந்தவற்றல்களின் பெயர்களைக் கூறு.

VI. வாழை மரத்தின் எல்லாப் பாகங்களின் பெயர்களையும் எழுது; அவற்றின் பயனையும் கூறு.

VII. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்—இவற்றின் நிறம், சுவை, பாகங்கள் எவை? விளக்கமாகப் பதில் சொல்.

VIII. மாங்கொட்டைக்கும் பலாக் கொட்டைக்கும் உள்ள வேறுபாடு என்ன? பதில் சொல்.

பயிற்சி—5

குறிப்பு :—கீழ்வரும் சொற்களுள் ஏற்றதைக் கோடிட்ட இடத்தில் அமைத்துப் படி.

எழுதுகிறேன்	எழுதுகிறோம்
எழுதுகிறாய்	எழுதுகிறீர்கள்
எழுதுகிறான்	எழுதுகிறார்கள்
எழுதுகிறாள்	எழுதுகிறார்கள்
மேய்கிறது	மேய்கின்றன

I. 1. நான் பாடம் ——.
2. அவன் பாடம் ——.
3. நீ பாடம் ——.
4. அவள் பாடம் ——.
5. நாங்கள் பாடம் ——.
6. நீங்கள் பாடம் ——.
7. அவர்கள் பாடம் ——.
8. அது புல் ——.
9. அவை புல் ——.

பயிற்சி—6

கன்று	குழந்தை	குஞ்சு
குட்டி		பிள்ளை

II. 1. வாழைக் ——.
2. பூனைக் ——.
3. குருவிக் ——.
4. தென்னம் ——.
5. எங்கள் ——.

III. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. மாங் ——.
2. கீரிப் ——.
3. அணிப் ——.
4. எலிக் ——.
5. நாய்க் ——.
6. உங்கள் ——.

பயிற்சி—7

இவற்றைச் செய்பவர் யார்?

இவற்றை உபயோகிப்பவர் யார்?



குறிப்பு:—முழுவாக்கியத்தில் பதிலை வரவழைக்கவும்.



27. எங்கள் கிராமம்

புதிய சொற்கள்:—தெருக்கள் - இருநூறு - அவற்றுள் - ஓட்டு வீடுகள் - குடிசை - ஏழைகள் - செக்கான் - சேணியன் - வேலைக்காரர் - அதிகாரி - மணியக்காரர் - வழக்குகள் - தீர்ப்பவர் - வரிவசூல் - எழுதுபவர் - கணக்கப்பிள்ளை - உதவியாக - தலையாரி - வெட்டியான் - தோப்பு - சோலை - காடு - செழிப்பானது.

இது எங்கள் **கிராமம்**. இதில் நான்கு தெருக்கள் இருக்கின்றன. இதில் இருநூறு வீடுகள் இருக்கின்றன. அவற்றுள் மாடி வீடுகள் சில; ஓட்டு வீடுகள் சில; குடிசை வீடுகள் பல.

கிராமத்தாருள் பலர் ஏழைகள் ; பலர் பலவகைத் தொழில்களைச் செய்பவர்கள். செக்கான், தச்சன், வண்ணான், சேணியன், குயவன் முதலிய தொழிலாளிகள் இருக்கிறார்கள். பயிர் வேலைக்காரரும் இருக்கிறார்கள்.

கிராமத்தின் பெரிய அதிகாரி **மணியக்காரர்**. அவர் கிராம வழக்குகளைத் தீர்ப்பவர்; வரி வசூல் செய்பவர். கணக்கு எழுதுபவர் **கணக்கப் பிள்ளை.** இவர்களுக்கு உதவியாக இருப்பவர்கள் **தலையாரியும் வெட்டியானும்** ஆவர்.

எங்கள் கிராமத்தில் சிறிய பள்ளிக்கூடம் இருக்கிறது. அதனில் மூன்று வகுப்புகள் இருக்கின்றன ; மூன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நன்றாய்ப் பாடம் கற்பிக்கிறார்கள்.

எங்கள் கிராமத்தில் கிழக்கில் **தென்னந் தோப்புகள்** உள்ளன; மேற்கில் **மாஞ்**

சோலைகள் உண்டு. வடக்கில் கரும்புக் காடுகள் இருக்கின்றன. தெற்கில் நெல் வயல்கள் உள்ளன. எங்கள் கிராமம் செழிப்பானது.

கேள்விகள்

1. கிராமத் தொழிலாளிகள் யார்? அவர்கள் என்ன பொருள்களைச் செய்கிறார்கள்?
2. கிராம அதிகாரிகள் யார்? அவர்கள் வேலை என்ன?
3. உங்கள் கிராமத்தின் எல்லையில் இருப்பவை எவை?
4. உங்கள் கிராமத்தைப் பற்றிச் சில விவரங்கள் கூறு.

பயிற்சி

1. நீ இப்பாடத்தில் கற்றுக்கொண்ட புதிய சொற்கள் எவை?

2. சில × பல
முதலாளி × தொழிலாளி } இவை எதிர்ப்பதங்கள். இவற்றைப் போன்ற எதிர்ப்பதங்களைச் சொல்.

(முதலாளி—எஜமானன், தொழிலாளி—வேலைசெய்பவன்.)

3. மேஜை, சட்டி, எண்ணெய், புடைவை—இவற்றைச் செய்து தரும் தொழிலாளர் யார்? இவற்றை எவற்றால் செய்கிறார்கள்?

4. தென்னந்தோப்பு
மாஞ்சோலை
கரும்புக்காடு } இவற்றைப் போலவுள்ள
(1) தோப்புகள் இரண்டு கூறு.
(2) சோலைகள் இரண்டு கூறு.
(3) காடுகள் இரண்டு கூறு.

28. ஆமையும் முயலும்

[நாடகம்]

புதிய சொற்கள் :—ஆமை - பந்தயம் - ஓட்டம் - எம்மாத்திரம் - சக்தி - இயல்பு - நமக்குள் - எதற்கு - நஷ்டம் - லாபம் - கட்டாயப்படுத்துவது - ஒப்புக்கொள்கிறேன்- சமயத்தில் - மத்தியஸ்தராக - வைப்போம் - முச்சந்தி - கவனியும்-பாவம் - காணோமே-வருவதற்குள் - நினைத்தார் போலும் - களைப்பு - தவறு - ஜெயிப்பார் - கருவம் - அடங்கியதா - கேவலமாக - பயனுக - தோல்வி- வெற்றி - உண்மை - ஒழுங்காக.

I

(முயலும் ஆமையும் பேசுதல்)



முயல்.—ஆமையாரே, நாம் இருவரும் பந்தய ஓட்டம் ஓடலாமா? என்ன சொல்லுகிறீர்?

ஆமை.—ஐயா, முயலாரே, நான் உமக்கு எம்மாத்திரம்? நீர் வேகமாக ஓடும் சக்தி உடையவர். நானே, மெதுவாக வரும் இயல்பு உடையவன். நமக்குள் பந்தயம் எதற்கு?

முயல்.—இருக்கட்டும். ஓடித்தான் பார்ப் போமே. இதில் என்ன நஷ்டம் வரும்?

ஆமை.—நஷ்டமும் இல்லை; லாபமும் இல்லை. நீர் கட்டாயப்படுத்துவதால் நான் ஒப்புக்கொள்கிறேன்.

(நரி வருதல்)

முயல்.—இதோ, நல்ல சமயத் தில் நரியார் வருகிறார். அவரையே மத்தியஸ்த ராக வைப்போம்.



நரி.—என்ன விசேஷம்?

முயல்.—நாங்கள் இருவரும் பந்தய ஓட் டம் ஓடப் போகிறோம். நாங்கள் இந்த இடத்தில் இருந்து புறப்படு வோம். நீர், முச்சந்தி ஆலமரத்து அடியில் இரும்; எவர் முதலில் வரு பவர் என்பதைக் கவனியும்.

நரி.—சரி. நல்ல வேடிக்கைதான். நான் அப்படியே செய்கிறேன்.

(நரி போதல்)

II

[முயலும் ஆமையும் புறப்பட்டு விட்டன. முயல் பாதி தூரம் வந்து விட்டது. ஆமை மெதுவாக வந்துகொண்டு இருக்கிறது. முயல் ஓர் ஆலமரத்து அடியில் தங்கியது.]

முயல்.—(தனக்குள்) அப்பா! என்ன ஓட்டம்! ஆமையாரைக் காணேமே! பாவம், அவர் என்ன செய்வார்? அவரால் வேகமாக ஓடமுடியவில்லை. அவர் இங்கு வருவதற்குள் நான் சிறிது தூங்கி எழுவேன்.



(முயல் தூங்குதல்)

(அந்த இடத்திற்கு ஆமை வருதல்)

ஆமை.—(தனக்குள்) என்ன! முயலாரா இங்குத் தூங்குகிறுர்! தூங்கி எழுந்தாலும் நான் வரமாட்டேன் என்று

நினைத்தார் போலும்! பாவம்! என்ன செய்வார்! மிகுந்த களைப்பு!

(ஆமை முன்னே ஓடுதல்)

[சிறிது நேரம் கழிந்தது. முயல் எழுதல்; ஆமை முன்னே போவதைக் காணல்.]

முயல்.—அடடா! மோசம் போனேனே! என்ன தவறு செய்துவிட்டேன்! ஆமையார் ஜெயிப்பார் போலும்!

[முயல் வேகமாக ஓடுதல்; ஆமை நரியை முதலில் அடைதல்; முயல் பின்னே போதல்; முயல் தோல்வி அடைதல்.]

III

நரி.—(முயலைப் பார்த்து) முயலாரே, உமது கருவம் அடங்கியதா? இல்லையா? ஆமையாரைக் கேவலமாக எண்ணி, வழியில் தூங்கிவிட்டீர். அதன் பலனாக உமக்குத் தோல்வி கிடைத்தது. தூங்காமல் வந்த ஆமையாருக்கு வெற்றி கிடைத்தது.



முயல்.—நரியாரே, நீர் சொல்லியது உண்மை. நான் என் கருவத்தால் தோல்வி அடைந்தேன். 'எவரும் கருவம் கொள்ளுதல் ஆகாது' என் பதை நான் இன்றுதான் கற்றுக் கொண்டேன். நான் இனி ஒழுங்காக நடப்பேன்.

கேள்விகள்

1. நீ முயலைப்பற்றி என்ன நினைக்கிறாய் ?
2. நீ ஆமையைப்பற்றி என்ன எண்ணுகிறாய் ?
3. நீ இப்பாடத்தால் அறியும் நீதி என்ன ?

பயிற்சி

1. வெற்றி × தோல்வி
   லாபம் × நஷ்டம்
   } இவை எதிர்ப் பதங்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. சக்தி, தவறு, பாவம், பந்தயம்: இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் பேசு.

குறிப்பு:—இத்தகைய கதைகளைப் பிள்ளைகளைக் கொண்டு நாடகமாக நடிக்கச் செய்க.

இது என்ன பண்டிகை?

படம் பார்த்துச் சொல்.



பயிற்சி

குறிப்பு :—எதிரில் உள்ள படங்களைப் பார்த்துக் கீழ் வரும் கேள்விகளுக்குப் பதில் சொல்லவும் எழுதவும் செய்க.

1. நீ முதல் படத்தில் என்ன பார்க்கிறாய் ?
2. பெண்கள் என்ன செய்கிறார்கள் ?
3. இது என்ன கடை ?
4. இவர்கள் என்ன வாங்குகிறார்கள் ?
5. இவர்கள் என்ன செய்கிறார்கள் ?
6. மாடு எப்படி இருக்கிறது ?
7. இந்தப் படம் எதைக் குறிக்கிறது ?
8. பெண்கள் என்ன செய்கிறார்கள்? இது என்ன பண்டிகை ?

9. படம் பார்த்துக் கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. வீடு———இருக்கிறது.
2. ஓர் அம்மை ——— சமைக்கிறாள்.
3. இது———கடை.
4. பெண்கள்——— ——— துணி ———.
5. மாடு ——— இருக்கிறது.
6. இன்று ——— பொங்கல்.
7. சிறுவர்கள் ——— அடிக்கிறார்கள்.
8. இன்று ——— பண்டிகை.

29. நம் கடமை

1. காலையிலே எழுந்திருந்து
 கடவுளை நாம் தொழுவோம்;
மாலையிலே விளையாடி
 மகிழ்ச்சியுடன் படிப்போம்.

2. காலையிலே குளிர்ந்த நீரில்
 களிப்புடன் நாம் குளிப்போம்;
பாலூட்டி வளர்த்தவர்தம்
 பாதம்பணிந்து நிற்போம்.

3. எங்களன்னை இஷ்டமுடன்
 ஈந்ததனை உண்போம்;
எதிரொன்றும் பேசாமல்
 ஏவினதைச் செய்வோம்.

4. பாடங்களைப் படித்திடுவோம்;
 பள்ளிக்கு நாம் செல்வோம்;
ஆடை அணி அணிந்திடுவோம்;
 அழகு நடை நடப்போம்.

5. ஆசிரியர் அன்பினுக்கே
 ஆளாகி நிற்போம்;
ஆசிரியர் வாழ்த்தினை நாம்
 அன்புடனே பெறுவோம்.

30. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டா.
4. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டா.
5. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டா.
6. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டா.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டா.
8. தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டா.
9. குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டா.
10. கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டா.
11. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டா.
12. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டா.
13. மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்க வேண்டா.
14. முன்கோபக் காரரோடு இணங்க வேண்டா.
15. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டா.
16. செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டா.
17. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டா.
18. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டா.